Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 41 | உள்ளூர் - 10.02.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 54 | * Issue 41 | வெளியூர் - 11.02.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com



பேங்க் ஆப் பரோடாவில் 419 காலியிடங்கள்

இவர்கள் இளம் கோடீஸ்வரர்களாக மாறுவார்கள்..!

தொடரும் பார்லிமென்ட் அமளி!

'ஜனநாயகன்' பட சென்சார் வழக்கு தள்ளுபடி!


# பிரதமர் மோடியுடன் சீஷெல்ஸ் அதிபர் சந்திப்பு..!



புதுடெல்லி, பிப். 10–

இந்தியப் பெருங்கடலில் கிழக்கு ஆப்பிரிக்காவையொட்டி அமைந்துள சிறிய தீவு நாடு சீஷெல்ஸ்.

இந்தியாவுக்கு 6 நாட்கள் அரசு முறை பயணமாக வருகை தந்துள்ள சீஷெல்ஸ் அதிபர் பேட்ரிக் ஹெர்மினியுடன் பிரதமர் மோடி நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளில் இந்தியா – சீஷெல்ஸ் இடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எட்டப்பட்டன.

தொடர்ந்து சீஷெல்ஸ் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான சிறப்பு பொருளாதார தொகுப்பு நிதியாக 17.50 கோடி டாலர் தொகையை இந்தியா அறிவித்துள்ளது.

இந்த நிதி, சீஷெல்சில் வீட்டுவசதி, மின்சார வாகனங்கள், தொழில் பயிற்சி, சுகாதாரம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும். மருந்துவம் மற்றும் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், கடல்சார் அறிவியல் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு, 1,000 மெட்ரிக் டன் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை இந்தியா வழங்குவது உள்ளிட்ட முடிவுகளும் இதில் எப்பட்டன.

# உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் பாஜக மையக்குழு கூட்டம்!



சென்னை, பிப். 10–

சேலத்தில் பிப்ரவரி 14 ஆம் தேதி உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் பாஜக மையக்குழு கூட்டம் நடத்த உள்ளது.

பிப்ரவரி 14 மாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அமித்ஷா பங்கேற்க உள்ளதாக நிர்வாகிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு பாஜக அமைப்பு பொதுச் செயலாளராக

**பிரஷோப குமார் நியமனம்**

தமிழ்நாடு பாஜக அமைப்பு பொதுச்செயலாளராக இருந்த கேசவ விநாயகம் மாற்றப்பட்ட நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட பிரஷோப குமார் மார்ச் மாதம் பொறுப்பு ஏற்க உள்ளார்.

**எஸ்.ஐ.ஆர் பணிகள் நிறைவு**

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர் பணிகள் 10 ஆம் தேதி நிறைவடைய உள்ள நிலையில் வரும் 17 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகிறது. வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டிருந்த நிலையில் 34.75 லட்சம் பேர் திருத்தம் மற்றும் புதியதாகச் சேர்க்கக் கோரி விண்ணப்பித்திருந்தனர்.

# எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளி; முடங்கியது லோக்சபா!



புதுடில்லி, பிப். 10–

ராகுலை பேச அனுமதிக்க கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால், லோக்சபா இன்றும் முடங்கியது. அவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையுடன், ஜன., 28ல், பார்லி., பட்ஜெட் கூட்டத்தொடர் துவங்கியது. கடந்த 1ல், 2026 – 27ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து, ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி கூட்டணி எம்.பி.,க்கள் பேசினர்.

காங்கிரசைச் சேர்ந்த லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், ராணுவ முன்னாள் தளபதி நரவனே எழுதியதாகக் கூறப்படும், இதுவரை வெளியிடப்படாத அவரது சுயசரிதையான, 'போர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ்டினி' என்ற புத்தகத்தை மேற்கோள்காட்டி பேசினார். 'வெளியிடப்படாத புத்தகத்தை மேற்கோள்காட்டி சபையில் பேசக் கூடாது' என, சபாநாயகர் ஓம் பிர்லாவும் கண்டிப்பு காட்டினார்.

அன்றைய தினம் முதல் அவை செயல்பட விடாமல் எதிர்க்கட்சி எம்பிக்கள் முடக்கி வருகின்றனர். இந்நிலையில் இன்றும் (பிப் 10) லோக்சபா கூடியதும் ராகுலை பேச அனுமதிக்க கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால், லோக்சபா முடங்கியது. அவையில் கூச்சல், குழப்பம் நிலவியதால் மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

**விரைவில்**

லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா ஒருதலைபட்சமாக செயல்படுவதாகக் கூறி, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. விரைவில் இந்த தீர்மானம் கொண்டு வரப்படலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ஓம் பிர்லாவுக்கு நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

# திருப்பரங்குன்றம் மலை தர்காவில் தினசரி தொழுகை கிடையாது: சுப்ரீம் கோர்ட்!



மதுரை, பிப். 10–

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தர்காவில் தினசரி தொழுகை நடத்த அனுமதி கோரிய மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம் , பண்டிகை நாட்களில் தொழுகை நடத்தலாம் என்ற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை உறுதி செய்தது

பிரச்னை . மதுரையை அடுத்த திருப்பரங்குன்றம் மலையில் , நெல்லித்தோப்பு தர்கா உள்ளது . இங்கு முஸ்லிம்கள் ஆண்டு முழுதும் தொழுகை நடத்த அனுமதி கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது . இதை விசாரித்த உயர் நீதிமன்றம் , ' சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படுவதை தவிர்க்க , ரம்ஜான் மற்றும் பக்ரீத் நாட்களில் மட்டும் தொழுகை நடத்தலாம். ' அனைத்து நாட்களிலும் தொழுகை நடத்த அனுமதி இல்லை . ' மலையில் , விலங்குகளை பலியிடுவது குறித்து தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்யும் வரை , எந்த ஒரு பலியிடுதல் , சமைத்தல் , அசைவ உணவைக் கொண்டு செல்வது , பரிமாறுவது ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்படுகிறது' என , உத்தரவிட்டது . இதை எதிர்த்து இமாம் உசேன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். அதில் , ' உயர் நீதிமன்றம் விதித்த கட்டுப்பாட்டுகளை நீக்க வேண்டும் . தர்காவில் அனைத்து நாட்களிலும் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்த அனுமதி அளிக்க வேண்டும்' என , கோரப்பட்டது . இந்த மனு , நீதிபதிகள் அரவிந்த் குமார் , பி . பி . வரலே ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது . அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் , ' இந்த விவகாரத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்னையை மையமாக வைத்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

' இது , சமநிலையான உத்தரவாக தெரிகிறது . இந்த உத்தரவில் நாங்கள் தலையிட விரும்பவில்லை . ' எனவே , உயர் நீதிமன்ற உத்தரவை உறுதி செய்து , மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்கிறோம்' என , உத்தரவிட்டனர் . இதன்படி , திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தர்காவில் ஆண்டுக்கு இருமுறை மட்டுமே தொழுகை நடத்துவதும் , விலங்குகளை பலியிட கூடாது என்பதும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வாயிலாக உறுதியாகியுள்ளது .

## தங்க நகை கடன்..

# ஆர்பிஐ கொண்டு வந்த புது ரூல்ஸ்...!

## யாருகெல்லாம் ஜாக்பாட்...!!




புதுடெல்லி, பிப். 10–

தங்கம் விலை உயர உயர தங்கம் சார்ந்து நடக்கும் வர்த்தகத்தில் மிகப்பெரிய அளவிலான மாற்றங்கள் நடை பெற்று வருகிறது. இதேபோல் தங்கம் தற்போது நிதி சந்தையில் முக்கிய சொத்தாக மாறியிருக்கும் வேளையில் இந்தியா முழுக்க இருக்கும் மக்கள் தங்கம், வெள்ளியை வைத்து கடன் வாங்க அதிகப்படியான ஆர்வம் காட்டுகின்றனர். இதை உணர்ந்த இந்திய ரிசர்வ் வங்கி (RBI) சிறு மற்றும் குறு தொழில்களுக்கு (Micro and Small Enterpris–es) கடன் பெறுவதை எளிதாக்கும் வகையில் புதிய விதிகளை அறிவித்துள்ளது.

இந்த விதிகள் சிறு கடைகள், பட்டறைகள், வர்த்தகர்கள், சேவை வழங்குபவர்கள், சிறிய உற்பத்தி தொழிற்சாலை வைத்துள்ள மக்களுக்கு பெரும் உதவியாக அமையும். இதன் மூலம் சிறு வணிகர்கள் வங்கிகளிடம் பயப்படாமல், எளிதாக கடன் பெற முடியும். ரூ.20 லட்சம் வரையிலான வணிக கடன்களுக்கு, கடன் வாங்குபவர் தானாக முன்வந்து தங்கம் மற்றும் வெள்ளியை பாதுகாப்பாக (collateral) வழங்கினால் அதை ஏற்றுக்கொண்டு வங்கிகளுக்கு கடன் வழங்கலாம் என்று ஆர்பிஐ இப்போது தெளிவான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

முன்பு இது குறித்து வங்கிகளுக்கு சந்தேகம் இருந்த நிலையில் தற்போது ஆர்பிஐ தெளிவுப்படுத்தியுள்ளது. இதுக்குறித்து ஆர்பிஐ வெளியிட்ட அறிவிப்பில் தங்கம், வெள்ளியை பிணை யமாக வைத்துக்கொண்டு கடன் வழங்குவதை அனுமதிக்கப்படுகிறது, இது விதிமீறல் அல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால் இது வங்கி நிர்வாகம் கடன் வாங்குபவர்களிடம் இதை கட்டாயப்படுத்தி தங்கம், வெள்ளியை வாங்க கூடாது என்றும் உத்தரவிட்டு உள்ளது.

ரூ.20 லட்சம் வரை கடன் மத்திய அரசு பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தின் (PMEGP) கீழ் வரும் தொழில்களுக்கு ரூ.20 லட்சம் வரையிலான கடன்களுக்கு எந்த பாதுகாப்பும் (சொத்து, தங்கம், வைப்பு நிதி போன்றவை) கேட்காமல் வழங்க வேண்டும் என்று ஆர்பிஐ கட்டாயமாக்கியுள்ளது. இது அனைத்து சிறு மற்றும் குறு தொழில்களுக்கும் (MSEs) இந்த சலுகை உண்டு. ரூ.25 லட்சம் வரை உயர்த்தும் வாய்ப்பு PMEGP திட்டத்தின் கீழ் கடனை வாங்கிய நிறுவனங்கள், அக்கடனை நல்ல முறையில் திருப்பிச் செலுத்தும் வரலாறு (repayment history) மற்றும் வலுவான நிதி நிலை (finan–cial performance) உள்ள தொழில்களை வைத்திருந்தால், வங்கிகள் தங்கள் உள் விதிகளின்படி பாதுகாப்பு இல்லா கடன் வரம்பை ரூ.25 லட்சம் வரை உயர்த்தலாம் என்றும் ஆர்பிஐ தெரிவித்துள்ளது.

எப்போது இருந்து இந்த விதிகள் அமலுக்கு வரும்?

புதிய வழிகாட்டுதல்கள் அனைத்து புதிய கடன்களுக்கும், புதுப்பிக்கப்படும் கடன்களுக்கும் பொருந்தும். இவை ஏப்ரல் 1, 2026 முதல் அமலுக்கு வரும். இதனால் MSE நிறுவன உரிமையாளர்கள் வங்கிகள் கடன் கொடுக்க மறுத்தாலும், கையில் இருக்கும் தங்கம், வெள்ளியை வைத்து PMEGP திட்டத்தின் கீழ் கடனை குறைந்த வட்டியில் பெற முடியும்.

**வங்கிகள் எப்படி ஆபத்தை கட்டுப்படுத்துகின்றன?**

பாதுகாப்பு இல்லா கடன்களால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட, கடன் உத்தரவாத திட்டம் (Credit Guarantee Scheme) மூலம் அரசு தனது இழப்பை சரி செய்யும். இதனால் வங்கிகளுக்கு பாதுகாப்பு உண்டு, இதன் மூலம் சிறு தொழில்களுக்கு கடன் கிடைப்பது எளிதாகிறது.

**ஏன் இந்த புதிய விதிகள்?**


சிறு மற்றும் குறு தொழில்களுக்கு வங்கிகள் அளிக்கும் கடன் அளவு வேகமாக வளர்ந்து வருகிறது. 2025 டிசம்பர் நிலவரப்படி, இத்தகைய தொழில்களுக்கு வங்கிகள் ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் கடன் வழங்கியுள்ளன–இது முந்தைய ஆண்டை விட 30% அதிகம். இந்தியா தற்போது உற்பத்தி பொருளாதாரத்தை நோக்கி சென்றுக்கொண்டு இருக்கும் வேளையில், மத்திய அரசு இத்தகைய கடன் அளிப்பது மூலம் MSME நிறுவனங்களுக்கு போதுமான நிதி ஆதாரம் கிடைத்து வேகமாக வளர்ச்சி அடையும். மேலும் MSME நிறுவனங்களின் வளர்ச்சி மூலம் பெரிய நிறுவனங்களுக்கு போதுமான உரிபாகங்கள், சேவைகள் உறுதி செய்யப்படும். இந்த புதிய விதிகள் சிறு வியாபாரி களுக்கு பெரும் நம்பிக்கையை அளிக்கின்றன. பாதுகாப்பு இல்லாமல் ரூ.20 லட்சம் வரை கடன் பெற முடியும் என்பது பலருக்கு புதிய தொழில் தொடங்கவோ அல்லது விரிவாக்கவோ உதவும். இப்படி கடன் பெற முடியாதவர்களுக்கு கையில் இருக்கும் தங்கம், வெள்ளியை பயன்படுத்தும் வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இந்திய கிறிஸ்துவ உயர்கல்வி சங்கம் (All India Association for Christian Higher Education) மற்றும் மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி (Women's Christian College) இணைந்து நடத்திய நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொண்டு, உரையாற்றினார். இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் நா.எழிலன், இனிகோ இருதயராஜ், இ.பரந்தாமன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே. சிற்றரசு, கிறிஸ்துவ உயர்கல்வி சங்க பொதுச் செயலாளர் அருட்தந்தை சேவியர் வேதம், கல்லூரி முதல்வர் டாக்டர் லில்லியன் ஜாஸ்பர், கிறிஸ்து சபையின் அருட்தந்தை தாமஸ் அமிர்தம், சென்னை கிறித்தவக் கல்லூரி முதல்வர் பால்வில்சன், மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி சங்கத் தலைவர் மோகன்எட்டி, கல்லூரிகளின் முதல்வர்கள் – டாக்டர் அஸ்ரார் செரீப், பால்ஜெயகர், அருட்சகோதரி ஸ்டெல்லா மேரி, அருட்தந்தை லூயிஸ் ஆரோக்கியராஜ், டாக்டர் பியுலா ஜெயஸ்ரீ, ஜார்ஜ், அம்துல் அஜீஸ், சங்க உறுப்பு கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகள், பேராசிரியர் பெருமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 10.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 27-ம் தேதி

## வர்த்தக ஒப்பந்தம்: உண்மையில் விவசாய துறையில் இந்தியா கொடுத்தது என்ன..?



இந்தியா–அமெரிக்கா மத்தியிலான வர்த்தக ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டதாக மோடி, டிரம்ப் உறுதியளித்த நிலையில், இந்தியாவும் அமெரிக்காவும் சமீபத்தில் ஒரு இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் (interim trade agreement) செய்யப்பட்டு உள்ளதாக அறிவித்துள்ளன. இது இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகத்தை சமநிலைப்படுத்தவும், பொருளாதார உறவுகளை வலுப்படுத்தவும் உதவும் முதல் படியாகும். இந்த ஒப்பந்தத்தில் இந்தியா அமெரிக்காவின் முக்கிய விவசாய மற்றும் டெய்ரி பொருட்களுக்கு கதவுகளை திறந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் இந்தியா இவற்றை முழுமையாக தடுத்து நிறுத்தி வைத்துள்ளது. இன்று இந்தியா டுடே நேர்காணலில் பேசிய மத்திய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் இந்தியாவுக்கு Sensitive ஆன பொருட்களுக்கு அமெரிக்காவுக்கு திறப்பதில் "எந்த சமரசமும் இல்லை" என்று தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு win–win என்று அவர் வலியுறுத்தினார். சரி, விவசாய துறையில் இந்த ஒப்பந்தம் மூலம் எவற்றுக்கெல்லாம் கதவுகள் திறக்கப்பட்டு உள்ளது.

**இந்தியா எதை தடுத்து வைத்துள்ளது?**

இந்தியா அமெரிக்காவிலிருந்து முழு சோயாபீன், சோளம், எரிபொருள் எத்தனால் (பெட்ரோலில் கலக்க பயன்படும்), பால் பொருட்கள், கோழி இறைச்சி, பருத்தி போன்றவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கவில்லை. இவை இந்திய விவசாயிகளுக்கு மிக முக்கியமானவை. அமெரிக்காவில் பெரும்பாலான இவை மரபணு மாற்றப்பட்ட (GM) பயிர்களாக இருப்பதால், உணவு பாதுகாப்பு விதிகள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி இந்தியா இவற்றை தடுத்துள்ளது. பால் பொருட்களுக்கு அமெரிக்க பசுக்கள் விலங்கு அடிப்படையிலான உணவு கொடுக்கப்படுவதும் ஒரு காரணம்.

**எதற்கு இறக்குமதி எளிதாக்கப்பட்டது? :**

இந்தியா சில அமெரிக்க விவசாய பொருட்களுக்கு இறக்குமதி வரியை குறைத்து அல்லது நீக்கி இந்திய சந்தையை அணுக எளிதாக்கியுள்ளது.

**இதில் முக்கியமானவை:**

DDGS (Distiller's Dried Grains with Solubles) – கால்நடை தீவனம் சோயாபீன் எண்ணெய் சிவப்பு சோளம் (red sorghum / jowar) – கால்நடை தீவனத்திற்கு பாதாம், வால்நட், பிஸ்தா போன்ற Tree Nuts பழங்கள் (புதிய மற்றும் பதப்படுத்தப்பட்டவை) வைன் மற்றும் ஸ்பிரிட்ஸ் சில கூடுதல் பொருட்கள் மர நட்ஸ் மற்றும் பழங்கள் போன்றவை இந்தியாவில் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படாததால், இவை விவசாயிகளுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. இந்தியா ஏற்கனவே அமெரிக்காவில் பாதாம், வால்நட், பிஸ்தா ஆகியவற்றை மிகப்பெரிய அளவில் வாங்கி வருகிறது. DDGS என்றால் என்ன? ஏன் இது முக்கியம்?:

DDGS என்பது எத்தனால் உற்பத்தியின் போது உருவாகும் உப பொருள். சோளம் அல்லது அரிசியை புளிக்க வைத்து எத்தனால் எடுத்த பின் மீதமுள்ள தானியத்தை உலர்த்தி DDGS ஆக்குகின்றனர். சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் எண்ணெய் புண்ணாக்கு. எண்ணெய் மற்றும் எரிபொருள் எடுத்த பின்பு கிடைக்கும் கழிவு தான் இந்த புண்ணாக்கு.. இந்த எண்ணெய் புண்ணாக்கு புரதம் நிறைந்தது என்பதால் கோழி, மாடு, மீன் வளர்ப்புக்கு முக்கிய தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் தற்போது சோயாபீன் மீல் (soyabean meal) அல்லது எண்ணெய் கேக் பயன்படுத்தப்படுகிறது. இதன் விலை கிலோவுக்கு ரூ.43–44. ஆனால் அமெரிக்க DDGS ரூ.24–30 வரை கிடைக்கலாம், ஒவ்வொரு தானியத்தை பயன்படுத்தும் போது புரத அளவு மாறுபடும், இதில் புரத அளவை சரிசெய்தாலும் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் புண்ணாக்கு விலை மிக குறைவு. இதனால் கோழி, மாடு, மீன் வளர்ப்போருக்கு செலவு குறையும், ஆனால் சோயாபீன் விவசாயிகளுக்கு விலை குறைவு ஏற்படலாம்.

**சிவப்பு சோளம் மற்றும் சோயாபீன் எண்ணெய் :**

அமெரிக்க சிவப்பு சோளத்திற்கு இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது, இது கால்நடை தீவனத்திற்கு உதவும். அமெரிக்கா உலகின் மிகப்பெரிய சோளம் ஏற்றுமதி செய்யும் நாடு. சோயாபீன் எண்ணெய்க்கு வரி குறைப்பு செய்யப்பட்டு உள்ளது, இதனால் இறக்குமதியை அதிகரிக்கலாம். இந்தியாவில் சோயாபீன் 1.3 கோடி ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது, இதில் முக்கியமாக மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாவட்டத்தில் பிரிடப்படுகிறது. ட்ரீ நட்ஸ் மற்றும் பழங்கள் இந்தியா–அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தில் அமெரிக்காவிலிருந்து பாதாம் (Almonds), வால்நட் (Walnuts), பிஸ்தா (Pistachios) போன்ற ட்ரீ நட்ஸ்களுக்கு இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இவை பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படாததால், உள்ளூர் விவசாயிகளுக்கு இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்று கருதப்படுகிறது. இந்தியா ஏற்கனவே அமெரிக்க மர நட்ஸ்களின் உலகின் மிகப்பெரிய வாங்குபவர் ஆக உள்ளது. 2025–இல் அமெரிக்கா மர நட்ஸ்களை 10 பில்லியன் டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி செய்தது, இதில் இந்தியா மட்டும் 1.5 பில்லியன் டாலர் மதிப்புக்கு வாங்கியுள்ளது. தற்போது கொடுக்கப்பட்டும் வரி குறைப்பால் இந்த இறக்குமதி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட பழங்களுக்கும் இறக்குமதி வரி குறைக்கப்படுவதால், நுகர்வோருக்கு இவை மலிவாக கிடைக்கும். இது இந்திய சந்தையில் போட்டியை அதிகரிக்கும் என்றாலும், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு பெரிய அச்சுறுத்தல் இல்லை என்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.

**யார் பாதிக்கப்படலாம்?**

அமெரிக்காவில் இருந்து அதிகளவில் இந்தியாவுக்கு சோயாபீன் வந்தால் இந்தியாவில் இருக்கும் சோயாபீன் விவசாயிகள் மற்றும் சோயாபீன் பதப்படுத்தும் ஆலைகள் பாதிக்கப்படலாம். DDGS இறக்குமதி அதிகரித்தால் இந்தியாவில் உருவாகும் சோயாபீன் புண்ணாக்கிற்கான தேவை குறையும். சோயாபீன் எண்ணெய் இறக்குமதி அதிகரித்தால் உள்ளூர் விலை குறையலாம். கோழி, பால், மீன் வளர்ப்போருக்கு நன்மை, ஆனால் விவசாயிகளுக்கு வருமான குறையும் அபாயம் உள்ளது.

ஏன் பால் மற்றும் மரபணு மாற்றப்பட்ட பயிர்களை தடுத்தது?

இந்தியா மரபணு மாற்றப்பட்ட சோயாபீன், மரபணு மாற்றப்பட்ட சோளம், அமெரிக்க பால் பொருட்களை அனுமதிக்கவில்லை. உணவு பாதுகாப்பு, கலாச்சார காரணங்கள் இதற்கு காரணம். ஒப்பந்தத்தில் "அமெரிக்க உணவு மற்றும் விவசாய வர்த்தகத்தில் நீண்டகால அல்லாத வரி தடைகளை" இந்தியா ஆராயும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இது எதிர்காலத்தில் மரபணு மாற்றப்பட்ட விதிகள் தளர்த்தப்படுமா என்ற கேள்வியை எழுப்புகிறது. இதேபோல் இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தில் அமெரிக்க இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்ட சில கூடுதல் பொருட்கள் என சேர்க்கப்பட்டு உள்ளது. இந்த லிஸ்டில் இருக்கும் பொருட்கள் என்ன..? என்பது அடுத்த முக்கிய கேள்வியாக உள்ளது. அமெரிக்கா – இந்தியா மத்தியிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா முக்கிய விவசாய பொருட்களை பாதுகாத்துள்ளது, ஆனால் கால்நடை தீவனம் போன்றவற்றுக்கு சந்தை திறந்துள்ளது. இது கால்நடை துறைக்கு நன்மையாக இருந்தாலும், சோயாபீன் விவசாயிகளுக்கு சவாலாக மாறியுள்ளது.

## பறவைக்காய்ச்சல் பரவல்: ஹாஃப் பாயில் சாப்பிடலாமா?





சென்னை, பிப். 10–

சென்னையில் பறவைக் காய்ச்சல் காரணமாக காகங்கள் இறந்தத்தை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகம் முழுவதும் கோழிப்பண்ணைகளில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இறந்த காகங்களை பறவைக்காய்ச்சல் தாக்கி உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது பறவைகளிடையே விரைவாகப் பரவக்கூடியது. பறவைக் காய்ச்சலை உருவாக்கும் எச்5என்1 வைரஸ் கிருமிகள் குறிப்பாக இடம் விட்டு இடம் பறக்கும் புறா, காகம், கொக்கு, நாரை போன்ற பறவைகளால் அதிகமாக பரப்பப்படுகிறது.

தொற்றுநோய் பரவலைத் தடுக்க தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலம் முழுவதும் கண்காணிப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னையில் தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் கட்டுக்குள் உள்ளது. மனிதர்கள் யாருக்கும் பாதிப்பு இல்லை.
* பறவைக்காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஹாஃப் பாயில் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.
* இறைச்சியை நன்கு வேக வைத்து சாப்பிடுவது அவசியமாக மாறி உள்ளது.
* இறந்த கோழியை உண்ண வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறினார்.


## வாட்ஸ் அப்பில் திருப்பதி தரிசன டிக்கெட்?

திருப்பதி, பிப். 10–

ஆந்திர மாநிலம் திருப்பதியில் பக்தர்கள் கஷ்டத்தை தீர்க்க, திருப்பதி தேவஸ்தானம் டிக்கெட்டுகளை பெற, வாட்ஸ் அப்பில் புதிய அம்சத்தை தொடங்கியுள்ளது. இதன் மூலம், வாட்ஸ் அப் மூலம் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து கொள்ள முடியும். எனவே வாட்ஸ் அப் மூலம் திருப்பதி தரிசன டிக்கெட்டை எப்படி பெறுவது என்பது குறித்து பார்க்கலாம்.

**வாட்ஸ் அப்பில் திருப்பதி தரிசன டிக்கெட் எப்படி பெறுவது?**

முதலில் 95552300009 என்ற எண்ணை உங்கள மொபைல் போனில் பதிவு செய்து கொள்ளுங்கள். பிறகு இந்த நம்பரில் இருந்து hi, hello என மெசேஜ் அனுப்ப வேண்டும். இதன்பிறகு, சிறப்பு தரிசனம், சர்வ தரிசனம் என ஏதேனும் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும்.




இதன்பிறகு, நீங்கள் எத்தனை பேர் தரிசனம் மேற்கொள்கிறீர்கள், தேதி என்ன போன்ற தகவல்களை உள்ளிட வேண்டும். இதன்பிறகு, ஒவ்வொரு பக்தர்களுக்கான ஆதார் எண்ணையும் உள்ளிட வேண்டும். அதன்பிறகு, தரிசன டிக்கெட் கட்டணத்தை யுபிஐ மூலமாக செலுத்த வேண்டும்.

இதன்பிறகு உங்களுக்கான டிக்கெட் வாட்ஸ் அப்பில் எண்ணிற்கு வரும். அவ்வளவு தான் ஈஸியாக வாட்ஸ் அப்பில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம். மேலும், இந்த வாட்ஸ் அப் எண் மூலம் அறைகளை நீங்கள் முன்பதிவு செய்யலாம். இதற்கு நீண்ட நேரம் கூட ஆகாது. ஆனால், தரிசன டிக்கெட் வெளியிட்டு நேரத்தில், இந்த நம்பருக்கு ட்ரை செய்தால், உங்களுக்கான தரிசன டிக்கெட் உறுதி செய்யப்படும். இல்லை யெனில் டிக்கெட் கிடைக்காது.

**இணையதளத்தில் தரிசன டிக்கெட் பெறுவது எப்படி?**

முதலில் ttdevasthanam.ap.gov.in என்ற இணையதளம் வாயிலாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய வேண்டும். நீங்கள் உங்களுக்கு பாஸ்வோர்ட், பெயர் உள்ளிட்டு முதலில் லாகின் செய்து கொள்ள வேண்டும். இதன்பிறகு, உங்களுக்கு ரூ.300 சிறப்பு தரிசனம் டிக்கெட் என்ற ஆப்ஷனை கிளிக் செய்து, பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர், ஆதார் எண் போன்றவற்றை உள்ளிட்டு, தரிசனத்திற்கான கட்டணத்தை செலுத்தினால், உங்களது டிக்கெட் உறுதி செய்யப்படும். ஆனால், மூன்று மாதங்களுக்கு முன்பே நீங்கள் முன்பதிவு செய்ய வேண்டும். உதாரணமாக, மே மாதத்திற்கான தரிசன டிக்கெட் பிப்ரவரி 24ஆம் தேதி தேவஸ்தானம் வெளியிடுகிறது. எனவே, அதனை நோட் செய்து டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யுங்கள்.





தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் பேரூராட்சியில், தமிழக அரசின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை ஆத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர். AK. கமால்தீன் தொடங்கி வைத்தார். உடன் செயல் அலுவலர் மகேஸ்வரி மற்றும் அலுவலகர்கள், மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இந்தியர்களுக்கு குட் நியூஸ்..!



சவுதி அரேபியா, பிப். 10–

சவுதி அரேபியா அரசு 2026–ஆம் ஆண்டுக்கான ஹஜ் (இஸ்லாமிய ஆண்டு 1447 ஹிஜ்ரி) சீசனுக்கான விசாக்களை பிப்ரவரி 8–ஆம் தேதி முதல் வழங்கத் தொடங்கியுள்ளது. இது வழக்கமான கால அட்டவணையை விட மிக முன்னதாக நடைபெறுவதால், லட்சக்கணக்கான ஹஜ் பயணிகளின் வருகைக்கு முன்பே அனைத்து ஏற்பாடுகளையும் சீராகவும், பாதுகாப்பாகவும் முடிக்க வேண்டும் என்ற சவுதி அதிகாரிகளின் திட்டமிட்டு உள்ளதை காட்டுகிறது. ஹஜ் உலகின் மிகப்பெரிய மற்றும் முக்கியமான புனித தலங்களில் ஒன்று என்பதால், இந்த முன்கூட்டிய தயாரிப்பு பணிகள், பயணிகளுக்கு மிகுந்த நன்மை தரும்.

**ஏன் இவ்வளவு முன்கூட்டியே தொடங்கியுள்ளனர்?:**

ஹஜ் பயணத்தை நிர்வகிப்பது மிகப் பெரிய சவாலாகும். லட்சக்கணக்கான மக்களின் பயண ஏற்பாடு, தங்குமிடம், போக்குவரத்து, உணவு, மருத்துவ வசதி, கூட்ட நிர்வாகம், பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் சீராக செய்ய வேண்டும். கடைசி நேரத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கவும், பயணிகளுக்கு சிறந்த அனுபவத்தை அளிக்கவும் சவுதி அரசு இந்த ஆண்டு முன்கூட்டியே தயார் பணியாகளை தொடங்கியுள்ளது. இதன் மூலம் இந்த ஆண்டு ஹஜ் பயண சீசனை மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றும் என எதிரபார்க்கப்படுகிறது.

**விசா வழங்கல் மற்றும் முக்கிய கால அட்டவணை :**

பிப்ரவரி 8–ஆம் தேதி முதல் ஹஜ் 2026–க்கான விசாக்கள் வழங்கப்படத் தொடங்கியுள்ளன. இதனால் பயணிகளும், ஹஜ் ஏஜென்சிகளும் ஆவணங்களை முடித்து, பயணத் திட்டமிடல்களை சீராகச் செய்ய அதிக நேரம் கிடைக்கிறது. சவுதி ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம் உலகெங்கிலும் உள்ள ஹஜ் அலுவலகங்களுக்கு விரிவான இயக்கக் கால அட்டவணையை (operational calendar) வெளியிட்டுள்ளது. இதில் பதிவுகள் எப்போது முடிக்க வேண்டும், ஒப்பந்தங்கள் எப்போது கையெழுத்திட வேண்டும், தங்குமிடம் மற்றும் போக்குவரத்து எப்போது இறுதி செய்ய வேண்டும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மாஸ்டர் டைம்டேபிள் போன்ற அட்டவணை அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைக்க உதவுகிறது. பணிகள் எப்போதே தொடங்கின? விசா வழங்கல் இப்போது தொடங்கினாலும், இந்த ஹஜ் சீசனுக்கான பணிகள் மிகவும் முன்னதாகவே ஆரம்பமாகிவிட்டன. 2025 ஜூன் 8–ஆம் தேதி (1446 ஹிஜ்ரி துல்ஹஜ் 12) முதல் ஆரம்ப ஆவணங்கள் உலகெங்கிலும் உள்ள ஹஜ் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன. இதனால் ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு முன்பே திட்டமிடல் தொடங்கியுள்ளது. இது சவுதி அரசின் தொலைநோக்கு திட்டத்தின் (Vision 2030) பகுதியாகும்– ஹஜ் சேவைகளை மேம்படுத்தி, பயணிகளின் அனுபவத்தை உயர்த்துவது.

**டிஜிட்டல் தளம் :**


சவுதி அரசு உருவாக்கிய நுஸ்க் மசார் என்ற டிஜிட்டல் தளம் ஹஜ் ஏற்பாடுகளை எளிதாக்குகிறது. இந்த தளத்தில் மினா, அரபத், முஸ்தலிபா ஆகிய இடங்களில் உள்ள இருப்பிடம் வசதிகள் போன்ற விவரங்கள் காட்டப்படுகின்றன. ஹஜ் அலுவலகங்கள் இந்த தகவல்களை முன்கூட்டியே பெற்றுள்ளன. இதனால் தங்குமிடம் மற்றும் போக்குவரத்து திட்டமிடலுக்கு அதிக நேரம் கிடைத்துள்ளது.

**பதிவு நிலவரம் மற்றும் ஏற்பாடுகள் :**

இதுவரை சுமார் 7.5 லட்சம் (750,000) பேர் ஹஜ் 2026–க்கு பதிவு செய்துள்ளனர். இதில் சுமார் 30,000 பேர் தங்கள் நாடுகளிலிருந்து நேரடியாக பதிவு செய்துள்ளனர். இந்த ஆரம்ப பதிவு கூட்ட அளவு, தங்குமிட தேவை, போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை கணக்கிட உதவுகிறது. ஏற்கனவே சர்வதேச பயணிகளுக்காக 485 கூடாரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 73 ஹஜ் அலுவலகங்கள் அடிப்படை ஒப்பந்தங்களை முடித்துள்ளன. மக்கா மற்றும் மதீனாவில் தங்குமிடம், சேவைகள் ஆகியவற்று க்கான ஒப்பந்தங்கள் பெரும்பாலும் முடிந்துவிட்டன.

**பயணிகளுக்கு என்ன நன்மை?**

இந்த முன்கூட்டிய தயாரிப்புகள் கடைசி நேர குழப்பங்களைத் தவிர்க்கும். மருத்துவ சேவை, போக்குவரத்து, கூட்ட நிர்வாகம் ஆகியவை சிறப்பாக செயல்படும். முதல் குழு பயணிகள் ஏப்ரல் 18, 2026 முதல் வரத் தொடங்குவர். இந்த ஆரம்ப திட்டமிடல் பயணிகளுக்கு பாதுகாப்பான, சீரான, அமைதியான ஹஜ் பயண அனுபவத்தை உறுதி செய்யும். ஹஜ்–க்கு பயணம் செய்ய திட்டமிடுபவர்கள் இப்போதே ஆவணங்களைத் தயாரித்து, நம்பகமான ஏஜென்சிகள் மூலம் பதிவு செய்வது நல்லது.



## இந்தத் தேதிகளில் பிறந்தவர்கள் இளம் வயதிலேயே கோடீஸ்வரர்களாக மாறுவார்கள்..!



எண் ஜோதிடத்தின்படி, சில குறிப்பிட்ட தேதிகளில் பிறந்தவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்கு குபேர பகவானின் சிறப்பு ஆசீர்வாதங்கள் உண்டு. அவர்கள் மிக இளம் வயதிலேயே பணம் சம்பாதித்து செல்வந்தர்களாகி விடுகிறார்கள். எந்தெந்த தேதிகளில் பிறந்தவர்களுக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

எந்த மாதத்திலும் 1, 10, 19, மற்றும் 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்படுகிறார்கள். இந்தத் தேதிகளில் பிறந்தவர்களின் பிறந்த எண் 1 ஆகும். எண் ஒன்றின் அதிபதி சூரியன். சூரியனைப் போலவே, இந்த நபர்களும் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஒரு ஒளியாகத் திகழ்கிறார்கள். அவர்கள் தங்கள் இருப்பால் அனைவரையும் மிகவும் நேர்மறையாகப் பாதிக்கிறார்கள். பிறந்த எண் 1 கொண்டவர்கள் நம்பிக்கையுடன் முன்னேறுகிறார்கள். அவர்கள் கடினமாக உழைப்பதை விரும்புகிறார்கள். அதை நம்புகிறார்கள். அவர்கள் தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு பணியிலும் கடினமாக உழைத்து, தங்களை அர்ப்பணித்து முன்னேறுகிறார்கள்.

பிறந்த எண் ஒன்று கொண்டவர்கள் பண விஷயத்தில் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்கிறார்கள். அவர்களுக்கு சம்பாதிப்பது மற்றும் முதலீடு செய்வது இரண்டிலும் நல்ல புரிதல் உண்டு. பிறந்த எண் 1 கொண்டவர்கள் ராஜச குணம் கொண்டவர்கள். அவர்களிடம் உயர்ந்த தலைமைப் பண்புகளும் உள்ளன. அவர்கள் மற்றவர்களின் கீழ் வேலை செய்ய விரும்புவதில்லை. ஜோதிடத்தின்படி, அவர்கள் இளம் வயதிலேயே, அதாவது சுமார் ஆறு மாத வயதிலேயே செல்வந்தர்களாகி விடுகிறார்கள். அவர்கள் மீது குபேரனின் சிறப்பு ஆசீர்வாதங்கள் இருப்பதால், வாழ்க்கையில் பணத்திற்குப் பஞ்சம் இருக்காது.

எந்த மாதத்திலும் 5, 15, மற்றும் 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் பிறந்த எண் 5 ஆகும். இந்த எண்ணின் அதிபதி புதன். ஜோதிடத்தில், புதன் புத்திக்கு அதிபதியாகக் கருதப்படுகிறார். பிறந்த எண் 5 கொண்டவர்கள் மிகவும் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்கிறார்கள். அவர்களிடம் உயர்ந்த பகுப்பாய்வுத் திறன்கள் உள்ளன. அவர்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். பிறந்த எண் 5 கொண்டவர்கள் வேலையை விட வியாபாரத்தில் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். அவர்களால் இடர்களை எதிர்கொள்ளும் திறன் உண்டு. முதலீடுகள் பற்றிய புரிதலும் அவர்களுக்கு உண்டு. இது அவர்களை நிதி ரீதியாக வலிமையாக்குகிறது.

பிறந்த எண் 5 கொண்டவர்களுக்கும் குபேரனின் ஆசீர்வாதங்கள் ஏராளமாக உண்டு. அவர்கள் செல்வத்தை பெருக்குவதில் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். மிகவும் புத்திசாலித்தனமான முதலீடுகளைச் செய்வதில் அவர்கள் வல்லுநர்கள். பிறந்த எண் 5 கொண்டவர்கள் இடர்களை எதிர்கொள்ளப் பயப்படுவதில்லை. பங்குச் சந்தை அல்லது வியாபாரத்தில் பெரும் லாபம் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு அதிகம். அவர்களுக்கும் அதிக வருமான ஈட்டும் சக்தி உண்டு. அவர்களின் வாழ்க்கையில் நிதி முன்னேற்றம் இருக்கும். அவர்கள் தங்கள் சொந்த கடின உழைப்பால் விரைவாக செல்வந்தர்களாகி விடுவார்கள்.

## ஏசியன் பெயிண்ட்ஸ் 'வேர் தி ஹார்ட் இஸ்' சீசன் 9 தொடக்கம்; வீட்டு அலங்காரத்திற்கு ஊக்கமளிக்கும் லுக் புக் அறிமுகம்!




மதுரை , பிப். 10–

ஏசியன் பெயிண்ட்ஸ் தனது பிரபலமான வீட்டு அலங்காரம் மற்றும் கதை சொல்லும் தொடர் 'Where The Heart Is' நிகழ்ச்சியின் 9வது சீசனுடன் மீண்டும் திரும்பியுள்ளது. இந்த சீசனில் சோனாக்ஷி சின்ஹா & ஜாகீர் இக்பால், கௌதம் கம்பீர், கீர்த்தி சுரேஷ் & ஆண்டனி தட்டில், அர்ச்சனா பூரன் சிங் & பர்மீத் சேத்தி, மற்றும் அமன் & பிரியா குப்தா ஆகியோரின் ஐந்து தனித்துவமான வீடுகள் காட்சிப்படுத்தப்ப டுகின்றன. ஒவ்வொரு வீடும் தனித்த பாணி, உணர்ச்சி மற்றும் வாழ்வின் நினைவுகளால் நிரம்பிய தனிப்பட்ட கதைகளை வெளிப்படுத்துகின்றன. இந்த பருவம், வீடுகளில் நிறம், மேற்பரப்பு மற்றும் அலங்காரம் வெறும் அழகிற்கான தேர்வுகள் அல்ல; அவை உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு மொழி என்பதை எடுத்துக்காட்டுகிறது. Nilaya Arc finishes, Royale Play textures மற்றும் Beautiful Homes Painting Services போன்ற ஏசியன் பெயிண்ட்ஸ் தீர்வுகள், இந்த வீடுகளின் உள்ளார்ந்த அழகை மேம்படுத்துகின்றன.

'நினைவுகளின் சுவர்', அமைதியான மேட் வெள்ளை பின்னணி, மற்றும் சுவர்–க்கு–தளம் வரை செல்லும் வடிவமைப்புகள் மூலம் ஒவ்வொரு இடமும் தனித்துவமான உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

இந்த சீசனின் முக்கிய புதிய அம்சமாக 'Asian Paints Where The Heart Is Lookbook' அறிமுகமாகியுள்ளது. நிகழ்ச்சியில் காணப்படும் வண்ணங்கள், பூச்சுகள், அமைப்புகள் மற்றும் அலங்கார பாணிகளை நுகர்வோர் தங்கள் சொந்த வீடுகளில் பயன்படுத்த உதவும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பேசிய ஏசியன் பெயிண்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அமித் சிங்கிள், இந்த தொடர் இந்தியர்களை தங்கள் வீடுகளை அவர்களின் தனிப்பட்ட அடையாளமாக பார்க்க ஊக்குவிப்பதாகவும், Lookbook மூலம் ஊக்கத்தை செயல்பாட்டாக மாற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.




## இரவு 11 மணிக்கு மேல் தூங்கும் நபரா நீங்கள்? 3 உறுப்புகளுக்கு ஆபத்து, ஜாக்கிரதை!



நம்மில் பலருக்கு தாமதமாகத் தூங்கும் பழக்கம் உள்ளது. அலுவலக பணிகள், வீட்டு வேலைகள், மொபைல் ஃபோன், சமூக ஊடக பயன்பாடு என பல காரணங்களால் நாம் இரவில் தாமதமாக தூங்குகிறோம். பலர் உறங்க நள்ளிரவு 12 அல்லது அதிகாலை 1 மணி கூட ஆவதுண்டு.

ஆனால் இரவு 11 மணிக்குப் பிறகு தூங்குவது நமது உடலுக்கு மிக ஆபத்தானது என்பது பலருக்குத் தெரிவதில்லை. இரவு 11 மணிக்குப் பிறகு தூங்குவது மூன்று முக்கிய உறுப்புகளுக்கு உறுப்பு சேதம் உட்பட பல உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இரவு 11 மணிக்குப் பிறகு தூங்குவதால், உடலின் முக்கிய உறுப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி இந்த பதிவில் காணலாம். இரவு 11 மணிக்குப் பிறகு தூங்குவது இந்த மூன்று உடல் உறுப்புகளையும் சேதப்படுத்தும்:

**கல்லீரல் பாதிப்பு**

இரவு 11 மணி முதல் அதிகாலை 3 மணி வரை, உடலின் வடிகட்டுதல் இயந்திரமான கல்லீரல் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். இந்த நேரத்தில், கல்லீரல் உடலில் இருந்து நச்சுகளை அகற்றி இரத்தத்தை சுத்திகரிக்கிறது. இருப்பினும், இரவில் தாமதமாக தூங்குவது கல்லீரலின் நச்சு நீக்கும் செயல்முறையை சீர்குலைக்கும். இது கல்லீரலுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், முகப்பரு, நிலையான சோர்வு மற்றும் செரிமான பிரச்சனைகளை அதிகரிக்கும்.

**மூளை மற்றும் நினைவாற்றலில் பாதிப்பு**

இரவு தாமதமாகத் தூங்குவது மூளையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தூக்கத்தின் போது மூளை அதன் கழிவுகளை கிளிம்பேடிக் அமைப்பு மூலம் சுத்தப்படுத்துகிறது. இரவு 11 மணி வரை விழித்திருப்பது மூளைக்கு ஓய்வு கிடைப்பதைத் தடுக்கிறது. இது நினைவாற்றல் இழப்பு, எரிச்சல், மன அழுத்தம் மற்றும் நீடித்த ப்ரெயின் ஃபாக் போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

**குடல் செயல்பாட்டை பாதிக்கிறது**

இரவு 11 மணிக்கு மேல் விழித்திருப்பது செரிமானத்திற்கு மோசமானது. இரவில் தாமதமாக விழித்திருப்பது கார்டிசோலின் அளவை அதிகரித்து பசியைக் கட்டுப்படுத்தும் ஹார்மோன்களை சீர்குலைக்கிறது. இது வளர்சிதை மாற்றத்தை மெதுவாக்குகிறது. எனவே, தாமதமாக விழித்திருப்பவர்கள் பெரும்பாலும் மலச்சிக்கல், அமிலத்தன்மை மற்றும் விரைவான எடை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

இரவில் நீங்கள் எந்த நேரத்தில் தூங்கச் செல்ல வேண்டும்?

இரவு 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையிலான நேரம் கோல்டன் ஹவர் என்று அழைக்கப்படுகிறது. இந்த நேரத்தில் உங்கள் உடல் அதன் ஆழமான தூக்கத்தைப் பெறுகிறது. இந்த நேரத்தில், உங்கள் உடல் தன்னைத்தானே சரிசெய்கிறது. எனவே, இரவு 11 மணி முதல் நள்ளிரவு 12 –க்குள் தூங்காவிட்டால், அது இந்த விலைமதிப்பற்ற நேரத்தை வீணடிப்பது போலாகும். அதனால்தான் குழந்தைகள் இரவு 8 மணி முதல் 9 மணிக்குள் படுக்கைக்குச் செல்ல வேண்டும் என்றும், இளைஞர்கள் இரவு 9 மணி முதல் 10 மணிக்குள்ளும், பெரியவர்கள் இரவு 10 மணி முதல் 10:30 மணிக்குள்ளும் தூங்கச் செல்ல வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

**சரியான நேரத்தில் உறங்குவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?**

– சரியான நேரத்தில் படுக்கைக்குச் செல்வது மன அழுத்தத்தைக் குறைக்கிறது.
– இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
– உடலில் உள்ள நச்சுகள் இயற்கையாகவே நீக்கப்படுகின்றன.
– செரிமான பிரச்சனைகள் தடுக்கப்படுகின்றன.
– மனம் அமைதியாக இருக்கும்.
– எடை கட்டுப்படுத்தப்படுகிறது.
– உடலின் நோய் எதிர்ப்பு சக்தி மேம்படுகிறது.
– முகம் இயற்கையான பளபளப்பைப் பெறுகிறது.
– இது சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

(பொறுப்பு துறப்பு: இந்தச் செய்தி உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். மதுரை மணி நாளிதழ்இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.)

## மானாமதுரையில் 16-ந்தேதி ஆர்ப்பாட்டம்: இ.பி.எஸ். அறிவிப்பு!

சென்னை, பிப். 10–

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் நிலவி வரும் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் மற்றும் நிர்வாக சீர்கேடுகளுக்குக் காரணமான மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் செயல்படுத்தாமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் தி.மு.க. அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும்; மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடவும், மானாமதுரை அரசு மருத்துவமனையில் நிலவி வரும் நிர்வாக சீர்கேடுகளை உடனடியாக சரிசெய்திட வலியுறுத்தியும், அ.தி.மு.க. சார்பில் வருகிற 16–ந்தேதி (திங்கட் கிழமை) காலை 10 மணியளவில், மானாமதுரை நகராட்சி அலுவலகம் எதிரில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். மதுரை புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர். பி.உதயகுமார், தலைமையிலும்; சிவகங்கை மாவட்டக் செயலாளர் பி.ஆர்.செந்தில்நாதன், முன்னிலையிலும் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க.வினர் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஏப்ரல் 2-வது வாரத்தில் தமிழக சட்டசபை தேர்தல்: தேர்தல் ஆணையம் திட்டம்!

சென்னை, பிப். 10–

தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய 5 மாநிலங்களுக்கு வரும் ஏப்ரல்–மே மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது.




தமிழகத்தில் நடைபெற்று வரும் தி.மு.க. அரசின் பதவிக்காலம் மே மாதம் 10–ந் தேதி நிறைவடைகிறது. எனவே, அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் தேதியானது இம்மாதம் இறுதியில் அல்லது அடுத்த மாதம் (மார்ச்) தொடக்கத்தில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இறுதி வாக்காளர் பட்டியல்**

இந்த நிலையில், தமிழகத்தில் நடைபெற்று வந்த வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியின்போது சுமார் 97 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் அதிரடியாக நீக்கப்பட்டன. அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டவர்களில் இறந்தவர்கள், இரட்டை பதிவில் சிக்கியவர்களை தவிர்த்து, முகவரி மாறியவர்கள் அதற்கான ஆதாரத்துடன் மீண்டும் விண்ணப்பிக்க அவ காசம் வழங்கப்பட்டது. அதற்கான அவகாசமும் இன்று நிறைவடைந்து ள்ளது. சுமார் 20 லட்சம் பேர் மீண்டும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 17–ந் தேதி வெளியிடப்பட இருக்கிறது. அந்தப் பட்டியலில் இடம்பெற்றவர்களே தேர்தலில் வாக்களிக்க தகுதியானவர்கள் ஆவார்கள்.

**தமிழகத்தில் தேர்தல் எப்போது?**

இது தேர்தலுக்கான ஏற்பாட்டில் ஒரு பகுதி என்றாலும், மற்றொரு பக்கம் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. இதற்கிடையே, நாளை (புதன்கிழமை) துணைத் தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் எத்துரு சென்னை வர இருக்கிறார். தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளை அவர் சந்திக்க இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், வாக்குச்சாவடி மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை குறித்தும் அவர் ஆய்வு செய்வார் என்று தெரிகிறது.

5 மாநில சட்டசபை தேர்தலை பல்வேறு கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. 2–வது கட்ட தேர்தலின் போது தமிழகத்திலும் வாக்குப்பதிவு நடைபெறும் என டெல்லியில் இருந்து வரும் தேர்தல் ஆணைய தக வல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, ஏப்ரல் 2–வது வாரத்தில், குறிப்பாக ஏப்ரல் 13–ந் தேதி தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

## சற்றே குறைந்த தங்கம் விலை!



சென்னை, பிப். 10–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 குறைந்து ரூ.1,16,640–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.70 குறைந்து ரூ.14,580–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி 300 ரூபாய்க்கும் பார் வெள்ளி ரூ.3 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

## தேர்தலில் தனித்து போட்டி? சசிகலா!

சென்னை, பிப். 10–



சசிகலாவை சந்தித்த அ.ம.மு.க. நிர்வாகி ஜீவிதா நாச்சியாரை கட்சியை விட்டு பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் நீக்கினார். சசிகலாவை சந்தித்ததால் கட்சியின் முக்கிய நிர்வா கியை நீக்கும் அளவுக்கு சசிகலா – தினகரன் இடையேயான பனிப்போர் உச்சம் அடைந்துள்ளது.

எடப்பாடி பழனிசாமியை மிக தீவிரமாக எதிர்த்து வந்த டி.டி.வி. தினகரன், தற்போது அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து விட்டார். தீவிர அரசியலில் சில காலம் ஒதுங்கியிருந்த சசிகலா, தற்போது அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணிக்கு எதிராக வரும் சட்டசபை தேர்தலில் களமிறங்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் வரும் சட்டசபை தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தனது ஆதரவாளர்களுடன் சசிகலா அவசர ஆலோசனை நடத்த உள்ளார்.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள இல்லத்தில் சசிகலா தனது ஆதரவாளர்க ளுடன் மாலை 3 மணிக்கு ஆலோசனை நடத்த உள்ளார். தேர்தல் தொடர்பாக ஆலோசிப்பதற்காக ஆதரவாளர்கள் அனைவரும் தனது இல்லத்திற்கு வருமாறு சசிகலா தரப்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வரும் சட்டசபை தேர்தலில் தென்மாவட்டங்களை குறிவைத்து சசிகலா களமிறங்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சட்டசபை தேர்தலில் போட்டியிட தயாராக இருக்கிறீர்களா? என ஆதரவாளர்களிடம் சசிகலா கேட்டு வருவதாகவும், தென்மாவட்டங்களில் முக்குலத்தோர் வாக்குகளை குறிவைத்து களமிறங்க திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்ததை சசிகலா தரப்பு ஏற்கவில்லை என தெரிய வந்துள்ளது.

## மார்ச் 1 முதல் RailOne ஆப் தான்... முன்பதிவில்லாத ரெயில் டிக்கெட்டுக்கான UTS செயலி செயல்படாது!

சென்னை, பிப். 10–

ரெயில்களில் சாதாரண டிக்கெட்டுக்கான யூ.டி.எஸ். செல்போன் செயலி வருகிற 1–ந் தேதி முதல் பயன்பாட்டில் இருந்து நீக்கப்படும் என்று ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. ரெயில்வே துறையில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தி வருகிறது. ஒரு காலத்தில் ரெயில் நிலையத்திற்கு நேரில் சென்று டிக்கெட் எடுக்கவும், வரிசையில் காத்திருந்து முன்பதிவு செய்யும் நிலை இருந்தது. தற்போது அனைத்தும் செல்போனில் இருந்தபடி மேற்கொள்ளும் வகையில் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. இதில் ஒவ்வொரு முறையும் நவீன தொழில்நுட்பம் ரெயில்வேயால் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மூலம் டிக்கெட் முன்பதிவு செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

முன்பதிவில்லாத டிக்கெட்டுகளை பெற தானியங்கி டிக்கெட் வினியோகம் செய்யும் எந்திரங்கள் ரெயில் நிலையங்களில் வைக்கப்பட்டன. பின்னர் யூ.டி.எஸ். என்ற செல்போன் செயலி மூலம் டிக்கெட் பெறும் வசதி வந் தது. பயணம் செய்யும் ரெயில் எந்த ரெயில் நிலையத்தில் உள்ளது. எங்கு வந்து கொண்டுள்ளது என்பதை அறிவதற்காக என்.டி.இ.எஸ். என்று சொல்லப்படும் தேசிய ரெயில் விசாரணை சேவை இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கான புகார்கள் குறித்து டிக்கெட் பரிசோதகர் அல்லது ரெயில்வே ஸ்டேசன் மாஸ்டரிடம் புகார் அளிக்கும் நிலை இருந்தது. தற்போது ரெயில் மதாத் எனப்படும் இணைய தளம், செல்போன் செயலி மூலம் ஆன்லைனில் புகார் அளிக்கும் வசதி கொண்டு வரப்பட்டது. ரெயில்களில் பயணம் செய்யும்போது உணவு ஆர்டர் செய்ய வசதி இல்லாமல் இருந்தது. தற்போது டிக்கெட் முன்பதிவு செய்யும் போதே அந்த சேவையையும் பெற முடியும். இவ்வாறாக பயணிகளுக்கான அனைத்து சேவைகளும் ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தநிலையில், முன்பதிவு டிக்கெட், சாதாரண டிக்கெட், குறைகளை பதிவு செய்ய, புகார் தெரிவிக்க, இருந்த இடத்தி லேயே உணவு பெற, சலுகை கட்டண டிக்கெட் ஆகிய அனைத்து சேவைகளும் ரெயில் ஒன் என்ற செயலி மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.




இந்த செயலி கடந்த ஜூலை மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. பயணிகளுக்கான அனைத்து சேவைகளும் இந்த செயலி மூலம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் முன்பதிவில்லாத சாதாரண டிக்கெட்டுக்கான யூ.டி.எஸ். செயலி வருகிற 1–ந் தேதி முதல் செயலிழக்கப்பட உள்ளது. அதாவது யூ.டி.எஸ். செயலி ஒவ்வொரு கட்டமாக செயலிழக்க செய்யப்பட உள்ளது. முதலில் புதிதாக சீசன் டிக்கெட் பெறுவது, சீசன் டிக்கெட் புதுப்பித்தல், புதிய பதிவு ஆகியன 1–ந் தேதிக்கு பின்னர் செய்ய முடியாது. தொடர்ந்து பிளாட்பாரம் டிக்கெட் பெறுவது, ஆர்–வாலட் என்று சொல்லப்படும் பதிவு செய்த பயணியின் கணக்கில் உள்ள தொகையை ரீ–சார்ஜ் செய்வது ஆகியன நிறுத்தப்படும். படிப்படியாக மேற்கொள்ளப் டும் இந்த மாற்றங்கள் முழுமையடையும் வரை பிளே ஸ்டோரில் இந்த செயலி செயல்பாட்டில் இருக்கும். ஆர்–வாலட்டை பொறுத்தமட்டில், மின்சார ரெயில்கள், பாசஞ்சர், எக்ஸ்பிரஸ் ரெயில்களில் தினமும் பயணம் செய்யும் பயணிகள் வசதிக்காக முன்கூட்டியே ஒரு குறிப்பிட்ட தொகையை பிரிபெய்ட் போல ரீ–சார்ஜ் செய்யும் வசதி உள்ளது. யூ.டி.எஸ். செயலி பயன்படுத்துபவர்கள் ரெயில் ஒன் செயலிக்கு மாறும் போது அவர்கள் கணக்கில் உள்ள ஆர்–வாலட் தொகை அப்படியே இருக்கும். அந்த தொகையை பயணிகள் ரெயில் ஒன் செயலியில் பயன்படுத்தி கொள்ள முடியும். எனவே அனைத்து பயணிகளும் ரெயில் ஒன் செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வேண்டும் என்று ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு
## பேங்க் ஆப் பரோடாவில் 419 காலியிடங்கள்!




Organization Name: Bank of Baroda
Notification No: BOB/HRM/REC/ADVT/2
Notification No: BOB/HRM/REC/ADVT/2026/07 026/06
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 253
Assistant Vice President 1 , MSME Relationship, Deputy Manager MSME Relationship, Assistant Manager MSME Sales Posts
2. Total No of Vacancies: 166
Senior Manager MSME Relationship, Senior Manager Credit Analyst, Manager Credit Analyst Posts
Place of Posting: All Over India
Starting Date: 06.02.2026
Last Date: 26.02.2026
Apply Mode: Online
Official Website: https://bankofbaroda.bank.in/

## இந்திய ராணுவ சட்ட பட்டதாரிகளுக்கான *jak தேர்வு!

இந்திய ராணுவ சட்ட பட்டதாரிகளுக்கான *jak தேர்வு எழுத LLB யில் 55 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றோர் 27–2–2026 வரை 'https://joinindianarmy.nic.in/' என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

## கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை: அமைச்சர் ராஜகண்ணப்பன் பரபரப்பு பேச்சு!



புதுக்கோட்டை, பிப். 10–

புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜகண் ணப்பன் பேசியதாவது:–


பிரதமர் மோடியை எதிர்த்து பேசக்கூடிய ஆற்றல் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தான் உள்ளது. எங்களை போன்றவர்கள் எல்லாம் அமைச்சராக வேண்டும் என்றால் அது திராவிட மாடல் ஆட்சி வந்தால் தான் முடியும். மீண்டும் தி.மு.க. ஆட்சி வரும். நீங்கள் மீண்டும் முதல்–அமைச்சராக வருவீர்கள் என முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் சொன்னேன். 1967 வரை காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. அப்புறம் அவர்களால் வர முடிந்ததா? சொன்னால் கோபித்து கொள்வார்கள். கூட்டணியில் உள்ளார்கள், ஒருவர் இருவர் இருந்து கொண்டு உயிரை வாங்குகிறார்கள், நானும், செல்வப்பெருந்தகையும் ஒரு திருமண நிகழ்வில் சந்தித்துக் கொண்டோம். என்ன செய்வது கூட்டணியில் இருக்கிறார்கள், போட்டோவுக்கு போஸ் கொடுக்க போய் நிற்கிறோம்.

எந்த கூட்டணி என்றாலும் சரிதான், மு.க.ஸ்டாலின் சொல்வதை கேட்பது தான் நம் கொள்கை. கூட்டணி ஆட்சி, கூட்டணி ஆட்சி என்று செய்தி வருகிறதாம். கருணாநிதி 110 இடங்களில் வெற்றி பெற்றபோது கூட்டணி ஆட்சியா அமைத்தார். வருகின்ற தேர்தலில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் 150 இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பார். இதனால் கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. வேண்டுமென்றால் கேட்கிறதை செய்து கொடுக்கின்றோம். கேட்டு பெற்று கொள்ளுங்கள்.

கன்னியாகுமரிக்கு சென்றபோது காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஒரு கோரிக்கை வைத்தார். அதை செய்து கொடுத்தேன். நாங்கள் எந்த கட்சி எம்.எல்.ஏ. என்றா பார்த்து செய்கின்றோம். விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.எல்.ஏ.க்கும் கேட்டதை செய்து கொடுக்கிறோம். அதனால் வேண்டும் என்பதை கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.



# தமிழக பா.ஜ. அமைப்பு பொதுச்செயலர் கேசவவிநாயகன் நீக்கம்!



சென்னை, பிப். 10–

தமிழக பா . ஜ ., அமைப்பு பொதுச்செயலர் பொறுப்பிலிருந்து கேசவவிநாயகன் நீக்கப்பட்டுள்ளார் . ஆர் . எஸ் . எஸ் ., மாநில சமுதாய நல்லிணக்க பொறுப்பாளராக , அவர் நியமிக்கப்பட்டுள்ளார்

‘ சமன்வய பைட்டக்’ எனப்படும் சங் பரிவார் அமைப்புகளின் மாநில நிர்வாகிகளின் கூட்டம் , சென்னை சேத்துப்பட்டில் உள்ள ஆர் . எஸ் . எஸ் ., தலைமை அலுவலகத்தில் , நேற்று மாலை நடந்தது . இதில் , பா . ஜ ., தேசிய அமைப்பு பொதுச்செயலர் சந்தோஷ் , ஆர் . எஸ் . எஸ் ., தமிழகம் , கேரளா அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன் , மாநில அமைப்பாளர் பிரஷோபகுமார் , தமிழக பா . ஜ ., தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

சட்டசபை தேர்தல் . தமிழக பா . ஜ ., விவகாரங்கள் குறித்தும் , சட்டசபை தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது . கூட்டத்தில் பேசிய ஆர் . எஸ் . எஸ் ., தமிழகம் மற்றும் கேரளா அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன் , ‘ கடந்த பத்து ஆண்டுகளாக , பா . ஜ ., மாநில அமைப்பு பொதுச்செயலர் பொறுப்பில் செயல்பட்ட ஆர் . எஸ் . எஸ் ., மூத்த பிரசாரகர் கேசவவிநாயகன் , மீண்டும் ஆர் . எஸ் . எஸ் ., பணிக்கு திரும்புகிறார்

‘ இனி , ஆர் . எஸ் . எஸ் ., அமைப்பின் தமிழக சமுதாய நல்லிணக்க பொறுப்பாளராக செயல்படுவார் , ‘ என அறிவித்தார் . ஆர் . எஸ் . எஸ் ., மாநில அமைப்பாளராக இருந்த கேசவ விநாயகன் , கடந்த இரண்டாயிரத்து பதினைந்து மார்ச் பதினைந்து ஆம் தேதி , தமிழக பா . ஜ ., இணை அமைப்புப் பொதுச்செயலராக நியமிக்கப்பட்டார் . பின் , இரண்டாயிரத்து பதினைந்து நவம்பர் இருபத்து ஏழு ஆம் தேதி , பா . ஜ ., மாநில அமைப்பு பொதுச்செயலராக அறிவிக்கப்பட்டார்

போஸ்ட் கார்டு . கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக , அப்பொறுப்பில் இருந்த அவர் , இரண்டு பூஜ்ஜியம் ஒன்று ஆறு இரண்டு பூஜ்ஜியம் இரண்டு ஒன்று சட்டசபை , இரண்டு பூஜ்ஜியம் ஒன்று ஒன்பது இரண்டு பூஜ்ஜியம் இரண்டு நான்கு லோக்சபா தேர்தல்கள் என , நான்கு பொதுத் தேர்தல்களுக்காக , தமிழக பா . ஜ ., வில் முக்கிய முடிவுகளை எடுப்பவராக இருந்தார் . பா . ஜ ., வைப் பொருத்தவரை , அமைப்புப் பொதுச்செயலர் பதவி என்பது முக்கியத்துவம் வாய்ந்தது

கட்சியின் அமைப்புப் பணிகள் அனைத்தும் , அவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் . இப்பொறுப்புகளில் , ஆர் . எஸ் . எஸ் ., அமைப்பின் அனுபவம் வாய்ந்த முழுநேர ஊழியர்கள் நியமிக்கப்படுவது வழக்கம் . கேசவவிநாயகன் மாற்றப்பட்டது குறித்து , ஆர் . எஸ் . எஸ் ., நிர்வாகி ஒருவர் கூறுகையில் , ‘ ஆர் . எஸ் . எஸ் ., முழுநேர ஊழியர் என்பவர் , முகவரி எழுதப்படாத போஸ்ட் கார்டு போன்றவர் . அவர் எந்த முகவரிக்கு , அதாவது எந்தப் பணிக்கு அனுப்பப்படுகிறாரோ , அந்தப் பணியில் பணியாற்ற வேண்டும் ‘ அந்த வகையில் , பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பா . ஜ ., வில் இருந்த கேசவவிநாயகன் மீண்டும் ஆர் . எஸ் , எஸ் ., பணிக்கு திரும்பியுள்ளார் . ‘ அவர் அமைப்பு பொதுச்செயலராக பணியாற்றிய காலத்தில் , தமிழக பா . ஜ ., பல்வேறு விஷயங்களுக்காக , மக்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டது’ என்றார்

# சென்னையில் தொடரும் போராட்டங்கள்!



சென்னை, பிப். 10–

‘தமிழக அரசின் புதிய ஓய்வூதிய திட்டத்தில், ஊராட்சி செயலர்களை இணைக்க வேண்டும்; மாத ஓய்வூதியம், 15,000 வழங்க வேண்டும்’ என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 5ம் தேதி முதல், சென்னையில் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

ஐந்தாம் நாளாக நேற்று, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகை அருகே, தமிழ்நாடு ஊராட்சி செயலர்கள் சங்கத் தலைவர் ஜான்போஸ்கோ பிரகாஷ் தலைமையில், 2,000க்கும் அதிகமானோர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர்; மாலையில் விடுவித்தனர்.

**ஊரக வாழ்வாதார இயக்க பணியாளர்கள்**

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து பணியாளர்கள் நலச்சங்கம் சார்பில், கடந்த 2ம் தேதி முதல், பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னையில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

எட்டாம் நாளான நேற்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள இயக்க அலுவலகத்தில், 700க்கும் மேற்பட்ட பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்து, மாலையில் விடுவித்தனர்.

**பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள்**

‘டெட்’ தேர்வு மதிப்பெண் குறைப்பு உள்ளிட்ட, 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆறாம் நாளாக நேற்று, சாலை மறியலில் ஈடுபட்ட பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளை, போலீசார் கைது செய்தனர்.

பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி சங்கம் சார்பில், 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 3ம் தேதி முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகே நேற்று, சாலை மறியலில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகளை, போலீசார் கைது செய்தனர்; மாலையில் விடுவித்தனர். இதனால், கோட்டூர்புரம் காந்தி மண்டபம் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, வாகன ஓட்டிகள், மாணவர்கள் உள்ளிட்டோர் சிரமப்பட்டனர்.

**மின் வாரிய ஊழியர்கள்**

தமிழக மின் வாரிய ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கத்தினர், மின் வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்களை, பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி, சென்னை அண்ணா சாலை பின்புறம், கடந்த சில தினங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று, சங்க நிர்வாகிகள், மின் வாரிய உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்த வந்தனர்.

பின், கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி, ஒப்பந்த ஊழியர்கள், மாலை மெரினா கடலில் இறங்கி, போராட்டம் நடத்தினர். இதில், 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அவர்களைப் போலீசார் கைது செய்தனர்.

**சத்துணவு ஊழியர்கள்**

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்குவது உட்பட, 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, ஊழியர்கள் நேற்று ஆறாம் நாளாக, காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை, தரமணியில் உள்ள, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலகம் முன் நடந்த, காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட, 1,200 ஊழியர்கள், தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். அவர்களை போலீசார் கைது செய்து, மாலை விடுவித்தனர்.

**மது கடைகளை திறக்க மறுத்து போராட்டம்**

டாஸ்மாக் மதுக்கடைகளில் பணிபுரியும் பணியாளர்களை நிரந்தரம் செய்வது, காலமுறை ஊதியம் வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் போராட்ட நடவடிக்கை குழுவினர், கடந்த, 1ம் தேதி முதல் சென்னை எழும்பூரில் காத்திருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். அதில் முக்கியமாக, ‘நேற்று மதியம், 12:00 மணி முதல் மூன்று மணி நேரம் மது கடைகளை திறக்காமல் கடையடைப்பு போராட்டம் நடத்தப்படும்’ என, போராட்ட குழுவினர் முன்கூட்டியே அறிவித்திருந்தனர். அதன்படி, மாநிலம் முழுதும் நேற்று மதியம், 12:00 மணிக்கு, 1,300 கடைகள் திறக்கப்பட்ட நிலையில், மீதமுள்ள கடைகள் திறக்கப்படவில்லை. அதேசமயம், சென்னை உட்பட பல இடங்களில் மது வகைகளை வாங்க, டாஸ்மாக் கடைகள் முன், மது பிரியர்கள் குவிந்தனர். ஆனால், கடைகள் திறக்கப்படாததால், குழப்பம் அடைந்தனர். அங்கிருந்த பணியாளர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின், டாஸ்மாக் மாவட்ட மேலாளர்கள், அதிகாரிகள் பேச்சு நடத்தி, கடைகளை திறக்க நடவடிக்கை எடுத்தனர். இந்நிலையில் நேற்றும் எழும்பூரில் போராட்ட குழுவினர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை, போலீசார் கைது செய்தனர்.

என்.எச்.எம்., பணியாளர்கள் போராட்டம் வாபஸ் தமிழ்நாடு என்.எச்.எம்., பணியாளர்கள், ஊதிய உயர்வு, மருத்துவ மற்றும் மகப்பேறு விடுப்பு உட்பட 29 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகே, நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை தமிழக அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன், போராட்ட குழுவினருடன் பேச்சு நடத்தினார். அதில், உடன்பாடு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, என்.எச்.எம்., பணியாளர்கள், தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, வேப்பேரி, பி.கே.என் ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியினருக்கு புத்தாடைகள், பழ வகைகள் மற்றும் மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார். இவ்விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதினம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு அப்பன் உலகாரிய இராமனுஜ எம்பார் சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் கமணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் துரை. இரவிச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விஜய் கூட்டத்துக்கு ‘420 தொண்டர் படை’ பாதுகாப்பு!

சேலம், பிப். 10–

சேலத்தில், வரும் 13ல், த.வெ.க., தலைவர் விஜய் பங்கேற்கும் கட்சி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்துக்கு போலீசார் அனுமதி அளித்துள்ளனர்.

இதையடுத்து, கூட்டத்துக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக, அக்கட்சியின் 420 பேர் அடங்கிய தொண்டர் படைக்கு, சேலத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.





இது குறித்து, சேலம் மத்திய மாவட்ட த.வெ.க., செயலர் பார்த்திபன் கூறியதாவது: ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி சிவகுமார், தொண்டர் படைக்கு பயிற்சி கொடுத்துள்ளார். கூட்டம் நடக்கும் இடத்தின் அருகே உள்ள மலைக்கு யாரும் போகாமல் தடுப்பது, கூட்டத்தை கட்டுப்படுத்துவது, வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுவதை தடுப்பது உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தற்போது, நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்துக்கு மேடை அமைக்கவில்லை; பிரசார வாகனத்தில் இருந்தபடி விஜய் பேசுவார். பாதுகாப்பு பணிகளை, 420 பேர் கொண்ட தொண்டர் படையினர் மேற்கொள்வர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆட்டோ, கால்டாக்சி ஓட்டுநர்கள் வேலைநிறுத்தம்!



சென்னை, பிப். 10–

ஆட்டோ கட்டணத்தை உயர்த்தாமல், தமிழக அரசு, 13 ஆண்டுகளாக காலம் தாழ்த்தி வருகிறது. எரிபொருள் விலை, வாகன பராமரிப்பு செலவு அதிகரித்துள்ளாக, ஆட்டோ ஓட்டுநர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, ஆட்டோ கட்டணம் உயர்வு, இருப்பிடம் காட்டும் கருவியை அரசே வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி, வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக, கடந்த மாதம் 26ம் தேதி, தமிழ்நாடு ஆட்டோ, கால்டாக்சி, சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் கூட்டமைப்பு அறிவித்தது.

இதற்கிடையே, போக்குவரத்து ஆணையர் கிரண் குராலாவுடன், தமிழ்நாடு ஆட்டோ, கால்டாக்சி, சுற்றுலா கேப் ஓட்டுநர்கள் கூட்டமைப்பு தலைவர் ஜாஹிர் உசேன், நிர்வாகிகள் தம்பி குணசேகரன், செல்வகுமார் ஆகியோர் பேசினர்.

அதில், முக்கிய கோரிக்கைகளுக்கு தீர்வு ஏற்படாததால், திட்டமிட்டப்படி இன்று, சென்னையில் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

# சோழவந்தான் அருகே திண்ணை பிரச்சாரம்!



சோழவந்தான், பிப். 10–

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே முள்ளிப்பள்ளம் ஊராட்சியில் அதிமுக மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் வாடிப்பட்டி தெற்கு ஒன்றியம் சார்பில் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர் பி உதயகுமார் கலந்துகொண்டு பெண்களிடம் அதிமுகவின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து விளக்கங்கள் கூறி வாக்குகள் சேகரித்தார் இந்த நிகழ்ச்சிக்கு வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கொரியர் கணேசன் தலைமை தாங்கினார் முள்ளிபள்ளம் ஊராட்சி செயலாளர்கள் சேது பரமசிவம் சந்திரன் முருகானந்தம் மாவட்ட பிரதிநிதி பாண்டியம்மாள் ராமநாதன் மற்றும் முல்லை சக்தி ஆகியோர் வரவேற்றனர் முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம் ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் பேரூர் செயலாளர் முருகேசன் துணைச் செயலாளர் தியாகு பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் விருகை தருமர் ஆகியோர் முன்னிலை வகித்தனர் நிர்வாகிகள் தகவல் தொழில் நுட்ப அணிசிங்கராஜ் பாண்டியன் முன்னாள் ஒன்றிய கவுன்சிலரகள் தென்கரை ராமலிங்கம் கருப்பட்டி தங்கபாண்டி நாச்சிகுளம் தங்கப்பாண்டி அவைத் தலைவர் கச்சிராயிருப்பு

முனியாண்டி ஊத்துக்குளி சண்முகம் தென்கரை ஊராட்சி செ யலாளர் முருகன் ஜெயக்குமார் மன்னாடிமங்கலம் ராஜபாண்டி ராமு முன்னாள் தலைவர் ரங்கநாதன் குருவித்துறை காசிநாதன் விரும்பப்ப ராஜன் வடகாடு பட்டி பிரபுசோழவந்தான் பேரூர் நிர்வாகிகள் துரை கண்ணன் ஜெயபிரகாஷ்உமா மாரி வெல்டிங் மாரி ஜேசிபி சுரேஷ் வைகை ராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர் இளைஞர் அணி மாவட்ட இணைச்செயலாளர் கேபிள் மணி நன்றி கூறினார் இதில் கூட்டணி கட்சியான பாரதிய ஜனதா கட்சி சார்பில் முத்துப்பாண்டி முருகேஸ்வரி செல்வி மற்றும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் பாட்டாளி மக்கள் கட்சி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர் . இதில் முள்ளிப்பள்ளம் கிளைக் கழகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் மற்றும் வாடிப்பட்டி தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சினிமா துளிகள்..!

### ‘ஜனநாயகன்’ பட சென்சார் வழக்கை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம்!



ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு ஆகியோர் நடிப்பில் உருவாகி உள்ள ‘ஜன நாயகன்’ படம், தணிக்கை சான்றிதழ் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வந்தது. இதனிடையே கிட்டத்தட்ட ஒரு மாதமாக நடைபெற்று வரும் வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில்,

ஜன நாயகன் படத்திற்கு விரைந்து தணிக்கை சான்றிதழ் வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கை பட தயாரிப்பு நிறுவனம் திரும்பப் பெறுவதாக அறிவித்தது. மீண்டும் நீதிமன்றம் சென்றால் தணிக்கை சான்றிதழ் கிடைக்க மேலும் தாமதமாகும் என்பதால், திரைப்படத்தை மறு தணிக்கைக்கு அனுப்ப தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் நேற்று வெளியான நிலையில் இந்த வழக்கு வாபஸ் பெறப்படுகிறது. இதன்மூலம் தணிக்கை வாரியம் மூலமாகவே இப்பிரச்சனை யை முடிக்க படக்குழு இந்த முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது. இந்த நிலையில், ஜன நாயகன் படத்திற்கு தணிக்கை சான்று கோரிய மனுவை வாபஸ் பெற தயாரிப்பு நிறுவனத்திற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ஜன நாயகன் படத்தை தயாரித்த நிறுவனம் வழக்கை வாபஸ் பெற விரும்பியதால் அதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி அளித்ததை தொடர்ந்து படக்குழு தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

### ‘கூஷ்கோர் பண்டட்’ தலைப்புக்கு வலுக்கும் எதிர்ப்பும், எச்சரிக்கையும்!




பிரபல இந்தி நடிகர் மனோஜ் பாஜ்பாய் ‘த பேமிலி மேன்’ வெப் தொடர் மூலம் பிரபலமானார். தமிழில் சூர்யாவின் ‘அஞ்சான்’ படத்தில் வில்லனாக நடித்திருந்தார். அவர் ஊழல் போலீஸ் அதிகாரியாக நடித்துள்ள இந்திப் படம் ‘கூஷ்கோர் பண்டட். இதை, ‘எ வெனஸ்டே’, ‘ஸ்பெஷல் 26’, ‘எம்.எஸ். தோனி: த அன்டோல்டு ஸ்டோரி’ உள்பட பல படங்களை இயக்கிய நீரஜ் பாண்டே தயாரித்துள்ளார். ரிதேஷ் ஷா இயக்கியுள்ளார். நெட்பிளிக்ஸ் தளத்தில் வெளியாக இருக்கும் இப்படத்தின் தலைப்புக்குப் பிராமண சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பிராமணர்களைக் குறிக்கும் வார்த்தையான பண்டிட்டின் பேச்சு வழக்கான ‘பண்டட்’ உடன் ‘கூஷ்கோர்’ (ஊழல்) என்ற வார்த்தையை இணைத்து பிராமண சமூகத்தை அவதூறு செய்துள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இத்திரைப்படக் குழுவினர் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டதை அடுத்து, வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படத்தின் சர்ச்சைக்குரிய தலைப்புக்கு எதிராக, வட மாநிலங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் தயாரிப்பாளர் நீரஜ் பாண்டே, இயக்குநர் ரித்தேஷ் ஷா, மனோஜ் பாஜ்பாய் ஆகியோரின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன.

இந்நிலையில், மேற்கிந்தியத் திரைப்பட ஊழியர்கள் கூட்டமைப்பு (FWICE), இப்படத்தின் தலைப்பு குறிப்பிட்ட சமூகத்தை இழிவுபடுத்தும் விதத்தில் இருக்கிறது என்றும் அத்தலைப்பை நீக்க வேண்டும் என்றும் படக்குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு தொழிலும் மரியாதை மற்றும் கண்ணியத்துக்குத் தகுதியானது. திரைப்படத் துறை, கருத்துச் சுதந்திரத்துக்கான ஓர் ஊடகமாக இருப்பதைத் தவிர, சமூகப் பொறுப்பையும் கொண்டுள்ளது. அதனால் அத்தலைப்பை உடனடியாக நீக்க வேண்டும். இல்லை என்றால் தொழில்ரீதியான ஒத்துழைப்பை வழங்க மாட்டோம் என்றும் எச்சரித்துள்ளது.

**தேவை**

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020